# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி





20/=

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

மார்ச் 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

மார்ச் - 2009


மலர்- 41 இதழ்- 02

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| இது பாடுகளின் காலம் | - | 02 |
| திருச்சிலுவைப் பாதை | - | 04 |
| முழு அர்ப்பணிப்பு | - | 06 |
| கண்ணால் காண்பதும்... | - | 08 |
| தெளிவொன்று... | - | 10 |
| தவக்காலமும் நமது... | - | 11 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 13 |
| கடுகுக் கதை | - | 15 |
| விடை தேடும்... | - | 16 |
| தற்கொலை செய்வோருக்கு... | - | 17 |
| உங்கள் சுகமான வாழ்வுக்கு.. | - | 20 |
| தமிழிசையின் தொன்மை | - | 21 |
| நித்திய இளைப்பாற்றியில்... | - | 23 |
| கருணைக் கொலை... | : | 24 |
| தமிழில் சில சொற்கள் | : | 25 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 20/=
ஆண்டு சந்தா : 350/=
(தபாற்செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...


விவிலியத்திலே 40 என்னும் எண்ணுக்குத் தனி உட்பொருள் உள்ளது. அந்த உட்பொருள் செபத்தையும் தவத்தையும் சுய சோதனையையும் ஆன்மீகப் புதுப் படைப்பையும் வலியுறுத்துகின்றது. அதாவது நோவா காலத்தில் ஏற்பட்ட 40 நாள் ஜலப் பிரளயம் (தொ.நூ 1:17), இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு செல்வதற்கு முன் 40 ஆண்டுகளாக மேற்கொண்ட பாலைவனப் பயணம் (இணைச்சட்டம் 8: 2,4), மோசே சீனாய் மலையில் மேற்கொண்ட 40 நாள் செபம் (வி.பயணம்: 24:18), நினிவே மக்கள் கடைப் பிடித்த நாற்பது நாட்கள் உண்ணா நோன்பு (யோனா 3:4), கடவுளின் மலையை நோக்கி 40 இரவும் பகலும் எலியா மேற்கொண்ட பயணம் (1 அரசர் 19:8) அத்தோடு புதிய ஏற்பாட்டிலே இயேசு தனது பகிரங்கப் பணியைத் தொடங்குவதற்கு முன்னதாக நாற்பது நாட்கள் மேற்கொண்ட செபமும் தவமும் (மத் 4: 1-12). இவ்வாறான விவிலிய மேற்கோள்களை ஆதாரமாகக் கொண்டே திருச்சபை தவக்காலத்தை 40 நாட்களாக அனுசரிக்கத் தந்திருக்கின்றது.

தவக்காலம் என்பது எமக்குத் தரப்பட்டுள்ள ஒரு தயாரிப்பு அல்லது ஆயத்தக் காலம். இறைமகன் இயேசுவின் அதி உன்னதமான பாடுகள், மரணம், உயிர்ப்பை சிந்திக்க, தியானிக்க, விழா எடுக்கத் தரப் பட்டிருக்கின்ற அருளின் காலம் என்று குறிப்பிடலாம். இந்தக் காலம் தனி நபராகவும் குடும்பமாகவும் குழுவாகவும் ஆன்மீக மறுபிறப்புக்கு இட்டுச் செல்ல வேண்டிய காலம். செப தவத்தாலும் தான தருமங்களாலும் இறைமகன் இயேசுவின் உயிர்ப்பினால் கிடைக்கப்பெற்ற விளைச்சலை அனுபவிக்கத் தரப்பட்ட ஆயத்த காலம். கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பே கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கு அச்சாணியாக இருக்கின்றது. ஆதலால் நாம் கடைப்பிடிக்கும் எமது தவக்கால புண்ணிய காரியங்கள் அந்த உயிர்ப்பின் உச்சநிலையைக் காண ஏதுவாக அமையவேண்டும்.

இறைமகன் இயேசுவின் பாடுகள், மரணத்தில் பங்கெடுப்பவர்களுக்குத்தான் கிறிஸ்துவின் உயிர்ப்பிலும் உரிமை எடுத்துக் கொள்ள முடியும். புனித பவுல் இச்செய்தியை இவ்வாறு குறிப்பிடுகிறார்: "திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கின்றோம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம்" (உரோ 6:3-4)

ஆகவே, நமக்கு அருளப்பட்டிருக்கும் அருளின் காலத்தைப் பயன்படுத்தி அதிக நேரத்தைச் செபத்தில் ஈடுபடுத்தி இறைவனோடு ஐக்கியமாவோம்; அடுத்திருப்பவரோடு ஒப்புரவாவோம். பிறர் படும் துன்பத்தில், வறுமையில், நோயில், அடக்கு முறையில் பங்கெடுப்போம். உயிர்ப்பின் மக்களாகி அநீதிக்கு எதிராக, அராஜகத்துக்கு எதிராக, அடக்கு முறைக்கு எதிராக, வறுமைக்கு எதிராகக் குரல் கொடுப்பதோடு செயல்படுவோம். உயிர்ப்பிறகுச் சாட்சி பகருவோம்.

- ஆசிரியர்



## இறைவாக்கு


"நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாயுள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள்"

(மத்தேயு: 6:6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இது பாடுகளின் காலம்



இறைவனது மீட்புத் திட்டத்திலே நம் இயேசு பெருமானின் பிறப்பு எவ்வளவு நிச்சயமானதொன்றோ, அவ்வளவுக்கு அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பும் நிச்சயமானவையாக அமைந்து காணப்படுகின்றன.

இத்தவக்காலத்தில் நாம் அடிக்கடி கிறிஸ்து பெருமானின் திருப்பாடுகளைப் பற்றித் தியானிக்கத் தூண்டப்படுகின்றோம். அதன் பலனாக நம் பாவ வாழ்விலிருந்து மீட்சியடைய முடியுமென்பது திருச்சபையின் எதிர்பார்ப்பு.

இயேசுவின் திருமுகப் பக்தி, இயேசுவின் பாடுபட்ட சொரூபப் பக்தி என்பவை இயேசு பெருமானின் பாடுகளைத் தியானிக்க உதவுவதோடு, அலகையின் தீமையினின்றும் கூட காக்க வல்லவையாகவும் உள்ளன. இவை சம்மந்தமான பல புதுமைகளைக்கூட நாம் அறிய முடிகிறது. இவற்றில் இயேசு பெருமானின் பாடுபட்ட சொரூபத்தின் புதுமையொன்றைப் பார்ப்போம்.

முன்னொரு காலத்தில் பெரு எனும் நாட்டிலே பிற சமய வாதியான ஒரு பேரரசன் இருந்தான். கிறிஸ்தவர்கள் தமதாண்டவராகிய இயேசுவின் கிருபையால் வெற்றி கண்டனர் என்று அறிந்து, இயேசுவின் பாடுபட்ட சொரூபத்தைக் காண ஆசைப்பட்டான். ஒரு கிறிஸ்தவ இல்லத்திலே பாடுபட்ட சொரூபம் இருப்பதை அறிந்து ஒரு வீரனை அனுப்பி அரண்மனைக்குக் கொணரச் செய்தான். அரசன் அரியணையில் வீற்றிருக்க, 300 பிரபுக்கள் சூழ்ந்திருந்த அந்த மண்டபத்திலே, கொண்டு வந்த சொரூபத்தைக் கையிலேந்தி, ஆச்சரியத்தோடே பார்த்து கிறிஸ்தவர்களின் பெரிய தெய்வம் இதுதானா? இதைக் கொண்டா கிறிஸ்தவர்களுக்கு அனேக வெற்றி கிட்டியது? இது சக்தியில்லாத பிச்சைக்காரன் என்று சொல்லிச் சிரித்து, நிந்தித்து, துப்பி அதைக் கொண்டு வந்தவனிடமே திருப்பிக் கொடுத்தான். அவையிலிருந்த பிரபுக்களும்கூட பரிகாசஞ் செய்தனர்.



இவ்வேளையில் அங்கு ஒரு பெரும் அதிசயம் நிகழ்ந்தது. பாடுபட்ட ஆண்டவரின் திருவுருவம் திடீரெனத் தலையசைத்துக் கண்களைத் திறந்து கோபத்துடன் அரசனையும் பிரபுக்களையும் சுற்றிப் பார்த்தது. உடனே அரசன், பிரபுக்களுட்பட அனைவரும் பயத்தால் மூச்சடைத்து மயங்கிச் சரிந்தனர். அரசன் மரித்துவிட்டான் எனுஞ் செய்தி பரவி, அனைவரும் அழுதனர். 3 மணி நேரத்தின் பின், அரசனும், ஏனையோரும் சுயநினைவு வந்து எழுந்தனர். எழுந்த அனைவரும் "கிறிஸ்தவர்கள் வணங்கும் இயேசுநாதர் மகா பெரிய தேவன். அவர் மிகப் பெரும் வணக்கத்துக்கும், மகிமைக்கும் உரியவரென்பதில் ஐயமேயில்லை. இனிமேல் யாராவது பாடுபட்ட சொரூபத்தை நிந்தை செய்தால், அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்" என்றனர். அதன்பின் அழகியதொரு ஆலயம் எழுப்பி அதனை ஸ்தாபிக்கக் கட்டளையிட்டான் மன்னன். சில நாட்களுக்குள் மன்னனும் இன்னும் சிலரும் திருமுழுக்குப் பெற்றனர்.

இயேசு பெருமான் மீண்டும் நமக்கு அவரது இரண்டாவது வருகையின்போது தென்படப் போகிறார். அவ்வேளையில் அவரது திருமுகத்தைக் கண்டு, அந்த அரசன் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பயம் கொள்ளப் போகிறோமா? அது பாவிகளுக்குரிய நிலை. ஆனால், நாம்....? அப்போது அவர் கூறப்போகும் கடுமையான வார்த்தைகளைக் கேட்டு நாம் பயப்படப்போகிறோமா? அத்தகைய பயம் எமக்கு வராதபடி காக்க வல்லவர் இறைமகன். எனவே, அவரது திருப்பாடுகளைத் தியானித்து, அதற்காகக் குறிக்கப்பட்டுள்ள பயனையடைந்து, பாவத்திலிருந்து மீண்டவர்களாய் வாழ முற்படுவது சாலவும் சிறந்தது. எமது மீட்பின் அடையாளமே திருப்பாடுகள் என்றால், அது மிகையாகாது. ஆதலால், நாம் பய பக்தியுடன் திருப்பாடுகளைத் தியானிக்க முன்வருவோம்.

• மற்றின்டா




## சிந்திக்க சில துளிகள்

*அழகு என்பதென்ன? பண்பான செயற்பாடுகள்*
*வாக்கு என்பதென்ன? சத்தியம் தவறாமை*
*பிணக்கு என்பதென்ன? நாவடக்கத் தெரியாமை*
*கணக்கு என்பதென்ன? வருவதைப் பேணத் தெரிவது*
*துரோகி என்பவன் யார்? நண்பன் போல் நடிப்பவன்*
*விவேகி என்பவன் யார்? வருமுன் காப்போன்*
*நண்பன் என்பவன் யார்? ஆபத்திலும் அருகிருப்பவன்*
*ஆசான் என்பவன் யார்? குறைகள் களைபவர்*
*கூட்டவேண்டியது எது? உழைப்பை*
*பிரிக்கவேண்டியது எது? சலிப்பை*
*வகுக்கவேண்டியது எது? இலட்சியத்தை*
*கழிக்கவேண்டியது எது? சோம்பலை*
*பெருக்கவேண்டியது எது? ஊக்கத்தை*



- வயலற் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருச்சிலுவைப் பாதை



க. கியூரி

பிலாத்துவின் அரண்மனையது
குற்றவாளிக் கூண்டில் ஒரு நிரபராதி
பெயர் இயேசு
விடுவிக்க வழி தேடிய பிலாத்து
தோற்றுப் போனான் மக்களிடம்
விதிவிட்ட வழியென
விலகிக் கொண்டான்
சிலுவை மரணம் தண்டனையென
வழங்கினான் தீர்ப்பை

பாவம் படையினர்
கூலிக்கு வேலை செய்பவர்கள்
ஏற்றினார் சிலுவையை
அது அவர்கள் தொழில்

தடுமாறினார் இயேசு
தடுமாற்றத்தின் உச்சக் கட்டமாய்
தடுமாறி
தரையை முத்தமிட்டார்

'விழுந்துவிட்டாயா
என்மகனே'
தழுவ எண்ணினாள் தாய் மரி
தடுப்புச் சுவராய் நின்றனர்
தடியேந்தியோர்
'அம்மாவிடம் -
வந்து விடமாட்டாயா'
ஏங்கிய தாயுள்ளத்தின்
எண்ணமெல்லாம்
சிலுவையின் பாரத்தைச் சுற்றியது

தாய்மையின் தவிப்பு
துடிதுடித்தது
இயேசுவின் மேனி
சோர்ந்து வீழ்ந்தது
பிடித்தனர் சீமோனை
சிலுவையைச் சுமக்க
உதவிடச் செய்தனர்

உதவிட பலர் இருந்தால்
எத்துன்பமும் இன்பம் தானே
ஓடிவந்தாள் பெண்ணொருத்தி
வெரோனிக்கா நாமம் சூடி
'பெண் என்றால் பேய்கூட
இரங்குமாம்'
படையினர் இரங்கியதில்
வியப்பில்லையே
துடைத்துவிட்டாள் அவர் முகத்தை
துணிந்து செய்தாள்
துளிகூடப் பயமின்றி

படையினரின் தாக்குதல்
இயேசுவை
பாடாய்ப் படுத்தியதோ
இடியாய்த் தாக்கியதோ
விழுந்துவிட்டார் மறுபடியும்
எழுவதற்கு எத்தனித்தார்
எழுந்தார், நடந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எங்கிருந்தோ வந்தது
ஒரு கும்பல்
உதவி செய்யவல்ல
உணர்வுகளைப் பறிமாற
அழுதது கூட்டம்
வடித்தது கண்ணீர்
அது பெண்ணின் ஆயுதமென
அறிந்திருந்த படையினர்
அடக்கினர்
அழுகையையல்ல, அவர்களை

நிறுத்தப்பட்ட
அழுகையுடன் எழுந்தவர்
நிதானம் இழந்தார்
நிலம் நோக்கிச்
சாய்ந்தார்
கொடுத்து வைத்த
நிலமது
ஏற்றுக்கொண்டது

எது எப்படியோ!
இப்படியொரு அவமானம்
எவருக்கும் நடந்திடக் கூடாதென
எண்ணுமளவு
அவமானப்பட்டார் அவர்
உடலின் துணிகள் அகற்றப்பட்டு...

மானம் காக்கப் பிறந்திட்டவர்
அவமானமாக்கப்பட்டார்
அநியாயத்துக்குப் பங்கிடப்பட்டன ஆடைகள்

இத்துடன் நின்றிருந்தால்
எத்துணை நிம்மதி
அத்தனை சக்தியையும் கொண்டு
அறைந்தார் ஆணியை
துடித்துப் போனார்
வெடித்தன கைகள்
புழுவாய் நெளிந்தார்

தந்தையின் விருப்பம்
இதுவென உணர்ந்திருந்தார்
தொங்கினார் சிலுவையில்
இல்லை, இல்லை
தொங்கவிடப்பட்டார்
மண்ணுக்கும் விண்ணுக்கும்
நடுவே
நன்மைக்கும் தீமைக்கும் இடையே
தொங்கினார்

எல்லாம் நிறைவேறிய
ஆனந்தம் அவர் முகத்தில்
தெரிந்த போது
ஆவி துறந்தார்.



## அறியவேண்டிய அறிவு

மிகமிக நல்லது - திட்டமிட்ட செயற்பாடு
மிகமிகத் தீயது - பழிவாங்குவது
மிகப் பெரிய வெகுமதி - பொறுமை
மிகமிகத் தேவை - சமயோசித புத்தி
மிக இனிமையானது - அன்பு செய்வது
மிக மோசமானது - பொறாமை
நம்பக் கூடாதது - வதந்தியை
ஆபத்தைத் தருவது - அதிக பேச்சு
உறவைக் கெடுப்பது - கடன்
உயர்வுக்கு ஒரே வழி - உழைப்பு
சாதனையின் சாதனை - விடாமுயற்சி
முன்னேற்றத்தைச் சிதைப்பது - கோபம்
நிம்மதியைக் கெடுப்பது - சந்தேகம்
நோயைத் தருவது - மிதமிஞ்சிய உணவு
செய்யவேண்டியது - உதவி
நட்பைப் பெற வழி - புகழ்ச்சியான பேச்சு
மதிப்பைப் பெற வழி - உயர் பண்புகள்
அமைதியாய் இருக்க ஒரே வழி - சகிப்புத் தன்மை
கடன் படாதிருக்க ஒரே வழி - சேமிப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முழு அர்ப்பணிப்பு

தூய பவுலின் வாழ்வில் இறைவன் அவரைத் தொடும் வரையிலும் அவரது போக்கு கிறிஸ்தவத்திற்கு எதிராகவே இருந்து வந்திருக்கின்றது. பரிசேயரான அவர் இயேசுவின் போதனைகளை மறுதலித்தவர்களோடு சேர்ந்திருந்த காரணத்தினால், வேகமாகப் பரவி வந்த கிறீஸ்தவத்தையும், இயேசுவைப் பின்பற்றும் கிறீஸ்தவர்களையும் வேரறுக்க கங்கணம் கட்டிக்கொண்டு முனைப்புடன் செயல்படுகிறவராய் இருந்தார். இயேசுவின் சீடர் முடியப்பர் கல்லால் எறிந்து கொல்லப்பட சவுலும் ஒரு காரணகர்த்தா என்பது மட்டுமல்ல அவர்களுக்குக் காவல் நின்றவராகவும் அவரைக் காண்கின்றோம்.

அவர் கிறீஸ்தவர்களுக்கெதிராகக் காட்டி நின்ற கடும் போக்கு இறைவனுக்கே ஏற்கவில்லை. அவர் செய்த கடிய செயல்களால் இயேசு தாமே துன்புறுவதாகக் கொள்கிறார். கிறீஸ்தவர்களைத் தேடி சவுல் டமாஸ்கஸ் செல்லும் பாதையில் இறைவன் அவரைச் சந்திக்கின்றார். அந்தச் சந்திப்பைத் தாங்கவொண்ணாமல் குதிரையினின்றும் வீசியெறியப்பட்டவர், பார்வையற்றுப் போகின்றார். தடுத்தது யார் என்று அறியாதவராய்க் குரல் கொடுத்போது, இயேசு குரல் கொடுக்கின்றார் "நீ துன்புறுத்தும் இயேசு நானே". கொடிய சிலுவை மரத்தின் போதும், அதற்கு முன்னர் பட்ட சித்திரவதைகளின் போதும் கூட இயேசு இத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்தியதில்லை. அந்த அளவுக்கு சவுலின் செயல்கள் அவரைத் துன்புறுத்தியிருந்தன. அது மட்டுமல்ல, தம் பெயரால் மற்றவர்களைத் துன்புறுத்துவது தனக்கெப்படிப்பட்டதாய் இருக்கும் என்பதை இதனால் இயேசு எடுத்துக் காட்டுகின்றார்.

அதே நேரம் சவுலுக்கு இன்னுமொரு உண்மையையும் இறைவன் இயேசு புலப்படுத்துகின்றார். "நாட்டுக் கட்டையை எதிர்த்து உதைப்பது உனக்குக் கடினம்" உன்னால் நெடுங்காலம் உண்மைக்கு எதிராக, இறைவனுக்கெதிராகச் செயற்பட முடியாது என்று சவுலுக்கு உணர்த்தப்பட்டது. சவுல் தன் கடவுளைக் கண்டுகொள்கின்றார்; கண்டுகொண்ட பின் முற்றிலும் மாறிப் போகின்றார்.

அவரது வரலாறு தெரிந்திருந்தவர்கள் அவரை ஏற்கப் பின் நிற்கின்றார்கள். தம்மைத் துன்புறுத்துபவன் மேலுள்ள வெறுப்பும் பயமும் அவர்களை அப்படிச் செய்யப் பண்ணுகின்றன. இருப்பினும் தம் மாற்றத்தினூடாக "மற்றவருக்கு எதிராக நான் பண்ணியவைகளுக்காக ஒன்றுக்குப் பல மடங்கு உத்தரிக்கின்றேன்" என்று சக்கேயு இயேசுவுக்கு உறுதி கூறியது போல, தன் தவறுகளை விடவும் பன்மடங்கு மேலாக இயேசுவை எடுத்தியம்பவும் அவரை அறிந்திராத மக்களுக்கு அவரை அறிவிக்கவும் சவுல் முனைகின்றார்.

தமக்குள்ள எல்லாவற்றையும் தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேற்கொண்டுள்ள பணியில் அர்ப்பணித்து முனைப்புடன் செயற்படுகின்றார். அப்படி அவர் செய்யும்போது தன்னை முற்றிலுமாக மறுதலித்து இறைவன் கையிலே தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்கின்றவராக "வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்". அவரது வழிகாட்டுதல்தான் என்னை நடத்துகின்றது. என் பேச்சும் மூச்சும், சொல்லும் செயலும் அவரேயன்றி நானல்ல என்று தம்மைப் பின்தள்ளிவிட்டு இயேசுவை முன்வைத்து வாழ்கின்றவராக அவர் மாறிப்போகின்றதைப் பார்க்கின்றபோது, நமக்கும் நம் வாழ்வின் அடித்தளம் எப்படி இருக்கவேண்டும் என்கின்ற உண்மை புரிகின்றதல்லவா?

தம் புதிய வாழ்வில் அவர் கொண்டிருந்த அர்ப்பணிப்பு அவரைக் கஷ்டங்களைத் தேடிச் செல்லும் துணிவு கொண்டவராக - எந்தப் பிரச்சினைகள் வரினும் அதற்குத்தக்கபடி முகங்கொடுக்கின்றவராக அமையப் பண்ணுகின்றது. "அவருக்காகவே" தன் வாழ்வு என்ற கொள்கையை வகுத்துச் செயற்பட்ட தூய பவுல் நமக்கும் அதையே முன்னுதாரணமாக விட்டு வைக்கின்றார்.

'நீயாக நீ வாழ முடியாது. இவ்வுலகில் நீ தனியாக இருப்பதுமில்லை. இறைவனிடம் உன்னைக் கொடு! சரணாகதியாகு!' "இனி என்னில் நீரே வாழும்" என்று இறைவனிடம் எம்மை ஒப்படைத்து வாழ தூய பவுல் எம்மை அழைக்கின்றார். அப்போது நீ எதற்கும் அஞ்சாத வாழ்வைப் பெறுவதுடன் எதுவும் உன்னை அசைக்காத நெஞ்சுரத்தையும் விசுவாசத்தையும் கொண்டிருப்பாய் என்று அவர் காட்டி நிற்கின்றார்.

கிறீஸ்தவம் இந்த நவீன உலகில் பல சவால்களைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றது. நாடுகள் பலவற்றிலும் அதன் இருப்பு கேள்விக் குறியாகிக் கொண்டிருக்கின்றது. தாக்கப்படுகின்ற மக்களாகக் கிறீஸ்தவர்கள் இன்று! இந்தச் சூழ்நிலையில் விசுவாச வாழ்வில் தளராது நாம் வாழவேண்டிய அவசியம் முன்னெப்போதுமில்லா வகையில் அதிகரித்துக் கொண்டு போகின்றது. எனவே தளரா விசுவாசம் நமக்கு வேண்டும். கஷ்டங்கள் துன்பங்கள் எதுவானாலும் அவற்றிற்கு முகம் கொடுக்கின்ற தைரியமும் எமக்கு வேண்டும். நம்மை முழுதாக இறைவன் கையில் ஒப்புவித்து எது நேரிடினும் 'உம் சித்தம் போல் ஆகட்டும்' என்று ஏற்றுக்கொள்ளும் மக்களாக நாம் வாழ மலர்ந்துள்ள இப்புத்தாண்டில் உறுதி கொள்வோம்.

**- ஆனந்தா ஏஜீ. இராஜேந்திரம் -**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

• *வயலற் சந்திரசேகரம்*

# கண்ணால் காண்பதும் பொய்



கதவுகளைத் திறந்துகொண்டு வீட்டினுள் நுழைந்த மனிதனுக்கு வீடே ஒரு சுடுகாடாகத்தான் தோன்றியது. மனதிலே துளியளவுகூட நிம்மதியின்றி நிலைதடுமாறினான். ஆடம்பரமான வீடு, அழகான டாம்பீகமான பொருட்கள், இன்னிசை இவை எதுவுமே அவனுக்கு நிம்மதியைத் தரவில்லை. மதுப் போத்தலை எடுத்து தனிமையிற் குடிக்கிறான். அதிலும் அவனுக்கு அமைதி கிட்டவில்லை. அவனது அலைமோதும் இதயம் கடந்தகால இன்ப நினைவுகளை மீட்டுவதற்கு... முயன்று... முயன்று தோற்றுப் போன நிலையில் அவன் எண்ணலைகள் அவன் வாழ்க்கையையே சோகக் காடாக்கிய நிகழ்வைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டவண்ணமே இருந்தன. அந்த அகோர நிகழ்வு அவன் அடிமனதை ஆட்டிப்படைத்தது.

அன்று அவன் மனைவி பௌத்திரா பொறுமையின் எல்லையையும் மீறிக் கூறியது மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

"பகீரதன்! உங்கட சந்தேகத்த எப்படித்தான் தீர்ப்பதென்று எனக்குத் தெரியாது... சந்தேகம் கொண்ட உங்கட சொல் அம்புகள் ஒவ்வொரு நாளும் என்னைக் கீறிக் கிழ்ச்சவாறே இருக்கு இதைவிட உயிர விடலாம்போல இருக்கு"

"ஓ! நீ பெரிய பத்தினி எண்டு நிரூபிக்கப் போறியா...? நீ டபிள் கேம் விளையாடுறதவிட செத்துப்போ... சனியன் பீட.... தொலஞ்சது எண்டு நிம்மதியா இருப்பன்"

பகீரதனின் ஆவேச வார்த்தைகள் அம்பாகப் பாய்ந்தது.

"சொல்லுறத நியாயபூர்வமா தெளிவாச் சொல்லுங்கோ"

"ஓ....கோ.... ஒண்டும் தெரியாத கன்னி என்னப் போட்டு ஆட்டுது சன்னி எண்ட கதமாதிரி இருக்கு" என்று ஏளனமாகக் கூறினான் பகிரதன்.

"ஏன்தான் உங்கட புத்தி இப்பிடி மாறிப்போச்சோ தெரியாது"

"நீதாண்டி மாத்தினனி.....
நடிப்புக்காறி....என்னமா நாடகமாடினாய்...
என்ன ஒரு இழிச்சவாயன் எண்டாடீ
எடைபோட்டுக் கொண்டாய்..?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"பகீரதன் வாயில வந்தபடி திட்டாதைங்க... எதையும் தீர விசாரித்து தீர்க்கமாய்த் தெரிந்த பிறகு தீர்மானியுங்க.."

"மூடடி வாய..."

"நிரந்தரமா மூடத்தான் போறன்..."

பௌத்திராவின் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொலவென ஓடியது.... மௌனியானாள் அவள்.

அன்று வழமைபோல பகீரதன் வேலைக்குப் போய்விட்டான். பௌத்திரா இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தாள். பிறிஸ்டல் போட் ஒன்றை வாங்கிவந்து

"இப்போதாவது நம்புங்கோ"

என கொட்டை எழுத்துகளில் எழுதி வைத்துவிட்டு அதிக பொருட்கள் அற்ற அறையில் தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டாள். பகீரதன் வீடு திரும்பியபோது அதிர்ச்சியடைந்தான். பௌத்திராவின் கருகிய சடலம் அவனை ஏளனமாகப் பார்த்தது. இரண்டு வருட இல்லற வாழ்க்கை சந்தேகத் தீயால் சாம்பலானது.

பகீரதன் சந்தேகத்திற்குக் காரணமாக அமைந்தது.....

அன்று அவன் அலுமாரியில் அவசரமாக பையில் ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தபோது அலுமாரி மூலையில் இதய வடிவான ஒரு பெட்டியைக் கைப்பற்றினான். அதன் ஒரு பக்கம் கண்ணாடி. மறுபக்கத்தில்,

"அன்பே! என் இதயத்தில் குடிகொண்ட உன்னை எத்தனை பிறவி எடுத்தாலும் அடைந்தே தீருவேன் இப்படிக்கு குருபரன்" என்று எழுதப்பட்டிருந்தது.

அன்றுமுதல் பகீரதன் பௌத்திரா மீது சந்தேகம் கொண்டலைந்தான். அவளைக் காணும்போதெல்லாம் வெறுப்பும் அருவருப்பும் போட்டியிட நரக வேதனையை அனுபவித்தான், அவளை எவ்வளவிற்கு எவ்வளவு அன்பு செய்தானோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஆத்திரமும் அருவருப்பும் அடைந்தான். தாடியையும் வளர்த்துக்கொண்டு தன்னில் அக்கறையின்றித் தடுமாறினான். யார் அந்தக் குருபரன் என்று தேடத் தொடங்கினான். ஆனால், இவனது சந்தேகம் அன்பு மனைவி பௌத்திராவையே விழுங்கிவிட்டது.

காலங்கள் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. நகர்ந்துகொண்டிருந்தது. காலவோட்டத்தில் பகீரதனின் தங்கை பமிலாவின் திருமணமும் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து முடிந்தது. அன்று புதுமணத் தம்பதிகள் பகீரதன் இல்லத்திற்கு வந்து, அவனுடன் பேசிக்கொண்டிருக்கும்போது பமிலா கூறியது பகீரதனைக் குறிறவாளிக் கூண்டில் ஏற்றி ஏளனம் செய்தது.

"அண்ணா! அண்ணீற்ற வைக்கச் சொல்லி ஒரு இதய சேப்பிலான பெட்டி ஒன்டக் குடுத்தனான். அத எடுத்துத் தாறீங்களா..?"

பகீரதன் அந்த இதய வடிவான பெட்டியை எடுத்துவந்து தங்கையிடம் கொடுத்தான்.

"அண்ணா! இந்தப் பிறசன்ட இவர்தான் எனக்குக் காதலர் தினத்தன்று தந்தவர், அப்போதெல்லாம் எங்ட காதல் வீட்ட தெரியாது. வீட்டில அறிஞ்சா எல்லாமே குழம்பிரும் எண்டு பயந்துதான் அண்ணீற்ற எல்லாத்தையும் விபரமாச் சொல்லி இத ஒளிச்சு வைக்கச் சொன்னனான். அண்ணிதான் அம்மாட்டத் தந்திரமாப் பேசி குருபரன் வீட்டில மாப்பிள கேக்கச் சொல்லி ஐடியா குடுத்து கல்யாணத்தையே முற்றாக்கினவ.

இத உன்னட்டச் சொல்லியிருந்தா அவசரப்பட்டு காரியத்தையே கெடுத்திருப்பாய். பாவம் அண்ணி, கல்யாணத்தப் பாக்காமலே போய்ச் சேந்திட்டா. அவவுக்கு அப்பிடி என்ன மனவிரக்தியோ..." என்று பெருமுச்சு விட்டாள் பமிலா.

பகீரதனின் தலை சுற்றியது. திடீரென இரண்டு கைகளாலும் தனது தலையில் ஓங்கி அடித்தான்; ஏங்கி அழுதான்.

"நான் ஒரு மகா பாவி.... அந்த உத்தமி மேல் வீண்பழி சுமத்திவிட்டேனே...." கதறினான். "உன்னை வாழ வைக்கவா அவள் மௌனியானாள்..... தீக்குளித்தாள்...."

அவன் கரங்களை இறுகப் பற்றிய குருபரன்

"பகீரதன் ப்ளீஸ்... றிலைக்ஸ்... றிலைக்ஸ்...."

"கொடிய பாவி நான் ஆராயாது அவளைச் சந்தேகப் பட்டுவிட்டேனே... கண்ணால் காண்பதும் பொய்தான்... பொய்தான்..."

பௌத்திராவின் படத்தருகே சென்றவன் கதறிக் கதறி அழுதான்...... அழுதான்..... சந்தேகத்தால் தனது வாழ்க்கை சூனியமானதை எண்ணி எண்ணி ஏங்கினான்.

'பௌத்திரா போன்று ஓர் அன்பு மனைவி இனி எனக்குக் கிடைப்பாளா...?'

கண்ணீர் கரை புரண்டது. பக்கத்து வீட்டு வானொலியிலிருந்து பெரிதாக ஒலித்தது அந்தப் பாடல்

"தன்னைத் தானே நம்பாதது சந்தேகம்........."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இன்றைய நிஜங்கள்

கழுதைக்குத் தெரியாது கற்□ர வாசனை.
சரி.
குதிரைக்குந் தெரியவில்லையே!
அதுவுஞ் சரிதான்
ஏனென்றால்:
அவை இரண்டுமே ஒருவகையில்
ஓரினந்தானே?
இதைவிடச்
சாக்கடையில் முக்குளிக்கும் பன்றியிடம்
சந்தனஞ். சவ்வாது வாசனையினை
எதிர்பார்க்க முடியுமா?
□வில் தேன் மாந்துந் தேனீ
புழுத்த புண்ணிற் சீழ் குடிக்கும் இலையான்
இரண்டையும் ஒன்றென ஏற்க
எறும்புக்கென்ன விசரா?
கருப்பஞ்சாறு கசப்பு
காஞ்சிரம் பருப்பு இனிப்பாம்
நாக்கிலே கோளாறா
நாவுரைக்கும் வாக்கிலே கோளாறா?
"சூரிய பகவானே சுறுக்காய் நீரை உறிஞ்சு
சுடு மணலிற் புரளவேண்டும் நான்"
என்று எந்தப்
பேத்தை மீனாவது பிதற்றுமா
சூம்பற் கிழாத்திதான் சொல்லுமா?
இளவேனிற் குயிலை
வசை பாடியது அண்டங்காக்கை
குரலைப் பார் குரலை
கா! என்றுநான் கரைந்தாலே
பாகின் சுவையதில் பரவும்...
என்னே சிந்(தை)தனை!
பொறாமைத் தீ
தான் பிறக்கும் கருவறையையே எரிக்கும்
நன்றி காட்டும் நாய்க்கே
நஞ்சை!ட்டும் மனிதன்
புனிதனாமடா தம்பி...!
நெஞ்சு
பொருமி வெடிக்குதாம் வெம்பி
"விரால்கள்" விரதமிருக்கக்
"குறட்டைகள்" இப்போ
கும்மாளமடிக்குது
இதனால்
குழம்பிப் போய்க் கிடக்குது குளம்
மனமுங் கூடத்தான்
தெளிவு பிறக்காமலா போகும்...?

- கவிஞர் நிலாதமிழின் தாசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தவக்காலமும் நமது சவால்களும்



சிதைந்துபோன சமுதாயத்தைச் சீரமைக்கும் வகையில் ஒருவரின் உடல் சிதைக்கப்பட்டது. சீர்கெட்ட உடலைச் செப்பனிடும் பணியில் ஒருவரின் இரத்தம் சிந்தப்பட்டது. எருசலேம் நகர் தொடங்கி கல்வாரி மலை உச்சி வரை தொடர்ந்த இந்தப் பயணத்தில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் காலத்தின் ஏடுகளில் மங்கிவிடவில்லை. இன்றும் எங்கெல்லாம் சீர்கெட்ட சமுதாயங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அந்தச் சிலுவைப் பயணத்திற்கும், அதில் நடந்த நிகழ்ச்சிகளுக்கும் நேரடித் தொடர்புண்டு.

உதாரணமாக எமது நாட்டை நோக்கும் போது, இங்கு இடம்பெற்று வரும் யுத்தம், அதனால் மக்கள் அனுபவித்து வரும் சொல்லாண்ணாத் துயரங்கள், சித்திரவதைகள், அட்டூழியங்கள், கொள்ளைச் சம்பவங்கள், கொலைச் சம்பவங்கள், இவை தவிர அதிகரித்து வரும் பொருட்களின் விலையேற்றம், நவ நாகரிகம் என்கின்ற பெயரில் சுற்றித் திரியும் இளம் சமூகம், பாடசாலைக்குச் செல்லும் மாணவிகளுக்கு ஒரு சில ஆசிரியர்களால் ஏற்படும் மானபங்க இழப்புகள் மற்றும் வீட்டின் பொருளாதார நிலைமையை எண்ணி பாடசாலை வாழ்வை நிறுத்திவிட்டு வேலை தேடி அலைந்து இறுதியில் முதலாளித்துவத்துக்கு அடிமையாகி தம் வாழ்வை பரிதாபத்திற்குரியதாக அமைத்துக்கொள்ளும் இளைஞர்கள், இவ்வாறான பல்வேறுபட்ட குறைபாடுகள், துயரம் நிறைந்த சீர்கேடுகளைக் குறிப்பிடலாம்.

மனிதனை மனிதனே உருவாக்கி, மனிதனை மனிதனே கொன்று குவித்து, பூமிக்கு உரமாகப் போட்டு, அதன்மீது மனிதனே ஏறிநின்று கை தட்டிக் கும்மியடிக்கும் நமது மனித சமுதாயத்திற்கு நம் ஆண்டவராகிய இயேசுவின் பாடுகள் மற்றும் மரணம், உயிர்ப்பு என்பன முற்றுப்புள்ளி வைக்குமா?

'கண் போன போக்கிலே கால் போகலாமா? கால் போன போக்கிலே..........?' என்பதற்கிணங்க, சிறு பிள்ளைகள் தொடங்கி முதியவர் வரை இன்று அனைவரிடமும் கையடக்கத் தொலைபேசிகள் நடமாடுகின்றன. ஆலயங்களில், இல்லங்களில், பாடசாலைகளில், கடைத் தெருக்களில், வீதிகளில், வாகனங்களில் மட்டுமின்றி ஆகாயம் வரையிலும் இக்கையடக்கத் தொலைபேசிகள் பாவிக்கப்படுகின்றன. அதிநவீன முறையில் வடிவமைக்கப்பட்ட இத்தொலைபேசிகளின் அளவுக்கு மிஞ்சிய பாவனைகளின் காரணமாக எமது மக்களின் வாழ்வியலில் புதுமையான சீர்கேடுகள் தலைதூக்கியுள்ளன. கையடக்கத் தெலைபேசி ஊடாக இணையத்தளத் தொடர்பினை இலகுவாகப் பெற்று, பார்வைக்கு உதவாத காட்சிகளை, செய்திகளை, இளம் சந்ததியினர் பார்வையிட நேர்கிறது. இப்பேற்பட்ட விடயங்கள் தடை செய்யப்பட வேண்டும். இதுவே எமது வாழ்வாகிவிடக் கூடாது. இவ்வாறான பல்லாயிரக் கணக்கான சவால்கள், தடைகள் உள்ளன, நாம் கிறிஸ்துவின் வாழ்வை வாழ்வதற்கு.

இன்று நாம் நற்செய்தியின் படி வாழ முடிகிறதா? இயேசுவின் நற்செய்தி லூக்கா 10: 25-36 என்னும் நல்ல சமாரியர் உவமையை நாம் வாசித்துவிட்டு இந்த உலகைச் சற்று திரும்பிப் பார்க்கும் போது மறுகணமே நாம் ஒன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறையிலிடப்படுவோம் அல்லது கடத்திச் செல்லப்பட்டு கயவர்களால் கொல்லப்படுவோம். துப்பாக்கி முனைக்குப் பயந்தே இன்று நம்மவர் மத்தியிலிருக்கும் நற்செய்தித் தூதுவர்கள் வாழ முடிகிறது. இந்திய நாட்டு ஒரிசா மாநிலத்தில் என்ன நடந்தது? என்ன நடக்கப் போகிறது? எத்தனை ஆலயங்கள் இடித்துத் தகர்த்தெறியப்பட்டன? எத்தனை கிறிஸ்தவ மக்கள் கொல்லப்பட்டனர்? சுற்றிலும் பிற சமய மக்களை இருத்திவிட்டு அவர்கள் அத்தனை பேருக்கும் மத்தியில் ஓர் அருள்தந்தையும் ஓர் அருட்செல்வியும் வஞ்சகர்களால் மானபங்கப்படுத்தப்பட்டனர். இதனடிப்படையில் நோக்கும் போது இயேசுவுக்குள் எப்படி நல்ல சமாரியராக வாழ முடியும்?

நமது சொந்த பந்தங்களோ அல்லது நமக்குத் தெரிந்த நண்பர்களோ, தெரியாத மனிதர்களோ, யாராகிலும் எம்மை நாடி வந்து உதவி கேட்டுத் தஞ்சம் புகும்போது, அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் புகலிடம் வழங்குதல் அல்லது உதவி புரிதல் என்பது தண்டனைக்குரிய குற்றமா? இப்படிப்பட்ட பணிகளை நாம் செய்யம் போதுதான் நாம் இயேசு கூறிய நல்ல சமாரியர் உவமையில் வாழ்ந்து காட்ட முடியும். இப்படிப்பட்ட சேவைகளைச் செய்ய யுத்தமும் எமக்கு ஒரு முட்டுக்கட்டையாகத்தான் இருக்கிறது.

எமது நாட்டில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையிலான யுத்தத்தின் இறுதியும் உச்சக் கட்டமுமே எமது நாட்டில் தற்சமயம் நிலவி வரும் யுத்தச் சூழ்நிலையாகும். உண்மை வெளிவர, வாயிருந்தும் பேச முடியாத அவல நிலையில் வாழ்ந்து வரும் எமது மக்களுக்காக நாமும் இயேசுநாதரைப் பிரார்த்திப்போம். இதற்காக இயேசுவைப் போல் போராட வேண்டும் என்று நாம் கூறுவதனால் பல்வேறு ஈனச் சொற்களும் எதிர்ப்புகளும் சவால்களும் எமக்கெதிராகத் தோன்றுகின்றன. இவைகள் எல்லாவற்றையும் இயேசுவுக்காகப் பொறுத்து வாழ்வதே எமது சவாலாகும்.

கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியன ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் இயலாதவர்களுக்கும் நம்பிக்கை கொடுக்க வேண்டும். கொள்கைக்காக வாழ்பவர்களுக்கும் அநீதியைத் தட்டிக் கேட்பவர்களுக்கும் உண்மைக்காக உழைப்பவர்களுக்கும் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்த்து நின்று தொடர்ந்து செயல்பட இந்தத் தவக்காலமானது சக்தியை அளிக்கவேண்டும்.

ஆனால், கொள்கைக்காக வாழ்பவர்களை உலகம் தெரியாதவன், பைத்தியகாரன் என்றெல்லாம் இன்றைய உலகம் கேலி செய்து ஒடுக்குகிறது அல்லவா! அநீதிகளைத் தட்டிக் கேட்பவர்களை, ஆள் பலத்தாலும் அரசியல் செல்வாக்குகளாலும் பண பலத்தாலும் நிர்மூலமாக்குகின்றனர் அல்லவா! எனவே, உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல்ல இயேசுவைப் பின்பற்றி நாம் வாழ வேண்டும். அப்படியெனில் இயேசு அனுபவித்த அதே துன்பங்களை நாமும் பெற்றுணர வேண்டும்; நாமும் அவராக மாற வேண்டும்.

**அருட்சகோதரர். ஜெ. மோசஸ்**
*புனித பிரான்சிஸ் அசீசியார் சபை*

தொலைந்த இளமை



## குறும்(புப்)பா - 14

அவனுக்கும் அவளுக்கும் விருப்பம்
ஆண்டுகள் போனாலும் நெருக்கம்
விருப்பங்கள் இருந்தாலும் வீடுபண மில்லாமல்
விருப்பென்ன, வருமட்டும் பொறுப்பம்! ~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' பிரபல சித்த வைத்தியர் கந்தப்பன் வினாயகமூர்த்தி அவர்களைச் சந்தித்தோம். மட்டக்களப்பு கல்லடியில் உள்ள விபுலானந்தர் இசைநடனக் கல்லூரிக்கு முன்பாகச் செல்லும் அனுமார் வீதியில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் எமக்காக அவர் காத்திருந்தார். பிற்பகல் 6.00 மணியளவில் அவருடனான செவ்வி இடம்பெற்றது. தொண்ணூறு வயது நிரம்பிய அவர், எம்முடன் நன்றாக ஒத்துழைத்தார். பல விடயங்களைப் பாடல்களாகவே பாடிக் காட்டி எம்மைப் பிரமிக்க வைத்தார். அவரது அபார ஞாபகசக்தி உண்மையில் வியப்புக்குரியது. நன்னூலில் இருந்தும் தொல்காப்பியத்தில் இருந்தும் மருத்துவ நூல்களில் இருந்தும் பாடல்களை எடுத்துப் பாடி உதாரணம் காட்டினார்.

**வணக்கம் ஐயா! உங்களைப் பற்றி 'தொண்டன்' வாசகர்களுக்கு ஓர் அறிமுகம் செய்யுங்களேன்...**

எனது பெயர் கந்தப்பன் வினாயகமூர்த்தி. நான் 1919ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பத்தாம் நாள் மட்டக்களப்பு நாவற்குடாவில் பிறந்தேன். எனவே, ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு விவேகானந்தா கல்லூரியில் பெற்றுக்கொண்டேன். அது தற்போது மகளிர் பாடசாலையாக மாற்றம் பெற்றுள்ளது.

தொடர்ந்து 'ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்' நடாத்திய பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றேன். பின்னர் 1946ம் ஆண்டு மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிக்காக இணைந்துகொண்டேன். நாங்கள்தான் அக்கலாசாலையின் முதலாவது அணியினர். பயிற்சியின் பின்னர் 1948ல் அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 'பவுனுகம' என்னும் இடத்திலுள்ள பாடசாலைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டேன். சில காலங்கள் அங்கு பணியாற்றியபின்னர் மகா இலுப்பள்ளம என்னுமிடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டேன்.

**அப்படியானால், நீங்கள் நொத்தாரி வேலையில் எப்படி இணைந்துகொண்டீர்கள்?**

எனது ஆசிரியர் சம்பளம் எழுபது ரூபா மட்டும்தான். அவ்வேளையில் 1951ம் ஆண்டு பதிவாளர் நாயகத்தினால் நொத்தாரிசு சோதனை வைத்தார்கள். அதில் சித்தியடைந்தேன். அது கௌரவமான தொழிலாக இருந்தமையால் அதில் இணைந்துகொண்டேன்.

**சித்த வைத்தியம் பற்றிச் சொல்லுங்களேன்.**

உலக வழக்கில் உள்ள வைத்திய வகைகளில் சித்தவைத்தியம் ஒரு வகை. அரபு நாடுகளில் யுனானி வைத்தியம் என்பார்கள். வட இந்தியாவில் ஆயுள்வேதம் என்பார்கள். தென்னாட்டில் ஆயுள்வேதத்தின் ஒரு பகுதியாக சித்தவைத்தியம் உண்டானது.

தென்னாட்டுச் சித்தர்கள், தென்னாட்டு மூலிகைகளைக் கொண்டு அறிமுகப்படுத்தி செயற்படுத்திய வைத்திய முறையே சித்தவைத்தியம். குறிப்பாக அகத்தியர் அவர்களே இதற்குப் பிதாமகர் என்று கூறலாம். 'தேரையர்' என்ற முனிவர் மூலிகைகளின் குணங்களைப் பற்றிப் பாடியுள்ளார். இவர்கள் இவ்வறிவை மெய்ஞானம் மூலமே பெற்றனர்.

சித்தவைத்திய முறையில் குளிசை, தூள், எண்ணெய் என்பன பாவிக்கப்படும். யுனானி முறையில் 'பஸ்பம்' பாவிப்பார்கள். ஆயுள்வேதம் சிங்கள முறையில் 'கஷாயம்' பாவிக்கப்படுகிறது.

**நீங்கள் சித்தவைத்திய அறிவை எப்படிப் பெற்றுக் கொண்டீர்கள்?**

பரம்பரை பரம்பரையாகத்தான் இதனைக் கற்கின்றோம். எனது தகப்பனார் வழியில் நான் ஐந்தாம் தலைமுறை. எனது தாயார் வழியில் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மூன்றாம் தலைமுறை. அவர்கள் கற்றுத்தந்த பாடல்கள், அவர்கள் செய்யும் வைத்தியமுறை என்பனவற்றைக் கண்டு, அறிந்து, கடைப்பிடித்துக் கற்றுக்கொள்வோம்.

**அது சரி! நீங்கள் ஐந்தாம் தலைமுறை என்றீர்கள். ஆறாம் தலைமுறையை ஆயத்தம் செய்து விட்டீர்களா?**

எனக்கு மகன் ஒருவர் இருந்தார். அவர் இதில் ஈடுபாடு மிக்கவர். அவரைத்தான் ஆயத்தம் செய்துகொண்டிருந்தேன். அவர் அகால மரண மடைந்ததால் (கண் கலங்குகிறார்) அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. எனினும் எனது மகளின் மகனை யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேத கல்லூரியில் சேர்த் துள்ளோம்.

**சித்தவைத்தியத்தின் பிரிவு கள் எவை?**

முறிவு, விஷம், சர்வாங்கம் என மூன்று பிரிவுகள் உள்ளன. அதில் நான் சர்வாங்க வைத் தியம் செய்பவன். உடல் சம்மந்தப்பட்ட சகல நோய் களுக்கும் பரிகாரம் செய்ய இயலும்.

**உங்கள் வைத்தியத்திற்குத் தேவையான மூலிகைகளை எங்கிருந்து பெறுவீர்கள்?**

சிலவகை மூலிகைகள் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். வேறு சிலவற்றை காடுகளில் இருந்து பெற்றுக்கொள்வோம். நம் பகுதிகளில் மூலிகைத் தோட்டங்கள் இல்லை. யாராவது முயற்சி செய்து இதனை ஏற்பாடு செய்து தந்தால் மிகவும் உதவியாக இருக்கும்.

**வைத்தியனுக்கு கண் மூன்று என்று சொல்வார்களே அது என்ன?**

மருந்து சுத்தம், குணம், மாறு பெயர் என் பனவே அவை. மருந்து சுத்தம் என்றால் கொடுக்கும் மருந்து சுத்தமாயிருத்தல் வேண்டும். குணம் என்றால் மூலிகைகளின் மருத்துவக் குணங்கள் பற்றித் தெளிவாக இருக்கவேண்டும். மற்றது மாறு பெயர். ஒவ்வொரு மூலிகைகளுக்கும் வெவ்வேறு மாறு பெயர்கள் உண்டு. அவற்றைப் பற்றி வைத்தியர் அறிந்துவைத்திருக்க வேண்டும்.

**சங்கடமான கேள்வி யொன்று. எமது வைத்தியர்கள் தங்களுக்குத் தெரிந்த வைத் தியம் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை. என்ற ஒரு பேச்சு உள்ளதே. அது பற்றி உங்கள் கருத்து என்ன?**

எனது தந்தையார், வைத்தியத் தொழிலில் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டிய மூன்று விடயங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்று: பகைமை பாராட்டக் கூடாது. அதாவது பகைவனாக இருந்தாலும் நோய் என்று வந்தபோது பகைமை பாராட்டாது வைத்தியம் செய்யவேண்டும்.

இரண்டு: எளியவர் என்றால் பணம், பொருள் பெற்றுக்கொள்ளாமல் மருத்துவம் செய்யவேண்டும்.

மூன்று: பட்டோலை கொடுக்கக் கூடாது. அதாவது, நோயாளிக்கு மருந்தாகக் கொடுக்க வேண்டுமேயொழிய மருந்துத் துண்டைக் கொடுக்கக் கூடாது. இதில் நல்ல அனுபவம் ஒன்று எனக் குண்டு. என்னுடைய உறவினர் ஒருவர் மருந்துக் கான பட்டோலையை வலிந்து பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

அதிலொரு மூலிகையின் பெயர் 'கூக நீறு' ஆகும். மருந்துக் கடையில் கூக நீறு என்று அவர் கேட்க சுண்ணாம்பைக் கொடுத்துவிட்டார்கள். அவர் சுண்ணாம்பையும் சேர்த்து மருந்து தயாரித்துவிட்டார். நல்லவேளை நோயாளிக்கு வாயில் சுண்ணாம்பு சுட்டதால் மருந்தைத் துப்பிவிட்டார்.

இன்னொன்றும் சொல்வார்கள். மன்னன் என்றாலும் வைத்தியரை நாடிச் சென்றால்தான் மருந்து பலிக்கும். வைத்தியர் மன்னனைத் தேடிச் சென்று வைத்தியம் செய்தால் அது வேலை செய்யாது.

**நீங்கள் சித்தவைத்தியம் தொடர்பான நூலொன்றை வெளியிடவுள்ளதாக அறிந்தோம். அது உண்மையா?**

ஆம்! உண்மை. 'அங்காதி பாதம்' என்னும் சித்தவைத்தியத்துக்கான அரிச்சுவடி நூல் என்று சொல்லகூடியவொன்றை வெளியிடுவதற்கான வேலை களை ஒரு வருடமாகச் செய்து வருகிறேன். (அவற் றின் கணினியச்சுப் பிரதியை எமக்குக் காட்டுகிறார். மிகப்பெரிய நூலாக வரும்)

**'தொண்டன்' வாசகர்க ளுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தியென்ன?**

நீங்கள் சித்தவைத்தியம் செய்ய விரும் பினால் பரம்பரை வைத்தியரிடம் மட்டும் செல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பண்டிதர், வைத்தியர் க. வினாயக மூர்த்தி அவர்கள் முன்னர் சிறப்பான குத்துச் சண்டை வீரர் ஆவார். சைவக் கோவில் நடைமுறைகள் பலவற்றை அறிந்தவர். 'நாவின்ன' என்னும் இடத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் மூலிகைத் தோட்டம் ஒன்றைத் திறந்துவைத்தபோது அதில் இவரும் கலந்துகொண்டவர். 1951ம் ஆண்டிலிருந்து இன்றுவரை கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கத்தின் தலைவராகப் பணியாற்றுகிறார்.

இவ்வளவு வேலைப் பளுவுக்கு மத்தியிலும் எமக்கு நேரம் ஒதுக்கித் தந்து ஒத்துழைத்தமைக்காக அந்தத் தொண்ணூறு வயது 'இளைஞனுக்கு' தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டோம்.

- ஆழியோன் -

# கடுகுக் கதை 13 ஜோனும் இலத்தீனும்

அதுவொரு சிறிய ஆரம்பப் பாடசாலை. அந்தப் பாடசாலை வளவின் மூலையிலிருந்த முருகன் கோவிலின் பக்கத்தில் இருந்த மாமரம் நிறையவே பூத்துக் காய்த்திருந்தது. ஏராளமான மாங்காய்கள் முற்றியும் கனிந்தும் இருந்தன. அதிபரின் கண்டிப்பு, பாடசாலை ஒழுக்கம் காரணமாக எப்பிள்ளையும் அக்கனிகளைப் பறிப்பதில்லை. முற்றிப் பழுத்த கனிகளை அதிபரே பறித்துக் கொண்டு வந்து வகுப்புப் பிள்ளைகளுக்கு வெட்டிப் பகிர்ந்து கொடுப்பார்.

ஆனால், சில தினங்களாக ஒவ்வொருநாளும் ஒரு மாங்கனி மட்டும் குறையத் தொடங்கியது. அதிபருக்கு ஆச்சரியம்! ஒரு நாள் காலை வேளையில் அவரும் இன்னொரு ஆசிரியரும் மரத்தண்டை மறைந்திருந்து பார்த்தனர். முதலாம் வகுப்புப் படிக்கும் சிறுவன் ஒருவன் பாடசாலைக்குள் முதல் ஆளாக நுழைந்து மாமரத்தடிக்கு வந்து ஒரேயொரு மாம்பழத்தை மட்டும் பிடுங்கி கழுவிச் சாப்பிட்டான்.

மற்றைய ஆசிரியர் அவனைப் பிடிக்க ஆயத்தமானார். உடனே அதிபர் சொன்னார்

"வேணாம் வேணாம்... அவன் முதல்ல சாப்பிடட்டும். வறுமையான பொடியன்... காலையில் சாப்பிடிறல்ல.... மத்தியானத்தில பள்ளியில கொடுக்கிற சோறு மட்டுந்தான். இனிமே நான் காலைச் சாப்பாட்ட ரெண்டு பார்சலாத்தான் கொண்டு வரவேணும். அவனுக்கு திருட்டு பிழையான விசயம் எண்டத பிறகுதான் சொல்லிக் குடுக்கணும்" என்றார்.



மற்றைய ஆசிரியருக்கு அதிபர் 'சிவனொளிபாத மலை'யாகத் தெரிந்தார். (ஒரே இமயமலையத்தான் சொல்லணுமா...?)

"ஜோனுக்கு இலத்தீன் கற்பிப்பவருக்கு இலத்தீன் மட்டும் தெரிந்திருந்தால் போதாது. ஜோனைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும்"

– பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விடைதேடும் வினா ஒன்று

சூழக் கடல் சூழ்ந்து
சொர்க்கமென நின்ற பூமி
சோர்ந்து பலர் நகைத்து
சோபை இழந்து போகவே
வாழும் உயிர்களிங்கே
வழி ஏதும் தெரியாமல்
கேள்விக் குறியாகிவிட்ட
வாழ்வே தெரிகிறதே

பொய்கள் வாய்களைவிட்டு
புறந்தள்ளப்படும் வரையில்
ஓயாமல் தொடர்ந்து வரும்
போரின் அவல ஓசை
ஒருபோதும் மறையாது
இம்மண்ணை விட்டு

அநாதைகள் அவலங்கள்
மரணங்கள் இவைகளெல்லாம்
வேதனையின் வடிவங்களே
ஆனாலும் இவையெல்லாம்
சாதாரணங்களே இம்மண்ணிங்கு

மானங்கள்
மதிப்பிழந்த நேரங்கள்
ஊனங்களாகிவிட்ட
உன்னதங்கள்
நேர்மையோ நியாயமோ
உண்மையோ
இவைகளெல்லாம்
வாழ்வோடு
இணையாத நேரங்களே
போரின் கோரநிலை
புறப்படக் காரணமே

கோரக் கொலைகளே
நாளின் முதற்செய்தி
கேட்டாலும் பார்த்தாலும்
இதைவிடச் செய்தி இல்லை
அமைதி சமாதானம்
இவை எல்லாம் வாழ்விலே
கேட்டு அலுத்துவிட்ட
வார்த்தை விளையாட்டுகளே

யுத்த அவலங்கள்
ஓங்கி உயர்ந்துநிற்க
இந்த யுத்தமே
அமர்ந்துவிட்ட ஆசனங்களின்
ஆயுளைக் காக்கும்
ஆயுதமாகவும் மாறியுள்ளதே

மனங்கள் நிறைந்து நின்றே
மலர்ந்திருந்த வாழ்வுகள்
உயர்ந்த நிலைகள்
உன்னத வாழ்வுகள்
எல்லாமே மறைந்துவிட
இன்று வாழ்வு
வீதிக்கு வந்துவிட்ட நிலையில்
"உயிரைக் காப்பது எப்படி?"
இதுவே
இன்று வினாவாகிவிட்டதே!

- அருட்பணி. N. C. அருள்வரதன் -

## 'மன்னா' ஆசிரியருக்கு விருது

மன்னார் மாவட்டத்திலிருந்து வெளியாகும் மன்னா பத்திரிகையின் ஆசிரியர் தமிழ்நேசன் அடிகளார் எழுதிய 'வெளிச்சத்தின் வேர்கள்' என்னும் நூல் சிறந்த சமய நூலுக்கான தேசிய விருதைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் செயற்பட்டுவரும் இலங்கை இலக்கியப் பேரவை 2006 – 2007ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நூல்களில் விருதுக்குரிய சிறந்த நூல்களுள் ஒன்றாக இதனையும் தெரிவுசெய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தற்கொலை செய்வோருக்கு

இக்கேள்விக்குப் பதில் அளிப்பதற்கு முன் ஒரு முக்கியமான விடயத்தை நாம் உணரவேண்டும். இறைவன் நமக்கு அளித்த உயிர் உன்னதமானது. அதற்கு உரியவர் அல்லது சொந்தக்காரர் இறைவனே. எனவே, இறைவன் எமக்கு அளித்த உயிர் என்னும் கொடையை நன்றியோடு பேணிப் பாதுகாத்து அதன் ஈடேற்றத்திற்காக உழைப்பது எமது கடமையாகும். யாருக்குமே உயிரை அழித்துக்கொள்ளும் உரிமை கிடையாது.

## மரணச் சடங்குகள் செய்யலாமா?

இப்பொழுது உங்கள் கேள்விக்கு வருவோம். இப்படியான ஒரு கேள்வி எழுவதற்குக் காரணம் கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாற்றில் அண்மைக் காலம்வரை தற்கொலை செய்வோருக்கு திருச்சபையில் மரணச் சடங்குகளோ திருப்பலியோ மறுக்கப்படுவதற்கான நேரடியான ஒரு சட்டம் இருந்ததுதான் என்று கூறலாம்.



## திருப்பலி ஒப்புக்கொடுக்கலாமா?

கத்தோலிக்கத் திருச்சபை தனது விசுவாச முதிர்ச்சிக்கமைய காலத்திற்குக் காலம் தனது சட்டங்களை மறுசீரமைத்து வருவது வழக்கமாகும். இதன்படி 1917ம் ஆண்டில் திருச்சபை அறிவித்த சட்டக்கோவைக்கும் 1983ம் ஆண்டில் வெளியிடப்பட்ட சட்டக் கோவைக்குமிடையே இவ்வடிப்படையிலான பல குறிப்பிடத்தக்க மாற்றங்களை நாம் காண முடியும்.

உங்கள் கேள்வி மரணச் சடங்குகள் பற்றியதால் மரணச் சடங்குகளும் அடக்கச் சடங்குத் திருப்பலிகளும் யாருக்கு மறுக்கப்படலாம் என்று 1917ம் ஆண்டு சட்டக் கோவையிலும் 1983ம் ஆண்டு சட்டக் கோவையிலும் என்ன கூறப்படுகிறது என்பதை முதலில் அறிந்துகொள்வது அவசியமானதாகும்.

### 1917ம் ஆண்டு திருச்சபைச் சட்டக்கோவை சட்டம் 1240

பின்வருவோருக்கு அவர்கள் மரணவேளையின் முன் மனமாற்றத்திற்கான அறிகுறிகள் காட்டவில்லை என்றால் திருச்சபையில் மரணச் சடங்குகள் மறுக்கப்படும்.

- பகிரங்கமாக விசுவாசத்தை மறுதலிப்பவர், திரிபுக் கொள்கையாளர், சமயப் பிளவை உருவாக்குபவர், வேறு சபைகளைச் சார்ந்தவர்கள்.
- திருச்சபையிலிருந்து நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வெளியேற்றப்பட்டோர்
- தம்மைத் தாமே அழித்துக்கொள்வோர் (தற்கொலை செய்வோர்)
- இன்னொருவரோடு சண்டை செய்து இறப்பவர் அல்லது அதனால் ஏற்பட்ட காயத்தால் இறப்பவர்.
- தங்களுடைய உடலை அடக்கம் செய்யாமல் எரிக்கவேண்டும் என்று முன்கூட்டியே கூறியிருப்பவர்.
- பகிரங்கமான பாவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேற்படி 1917ம் ஆண்டின் திருச்சபைச் சட்டத்தில் மரணச்சடங்கு மறுக்கப்படுவோரை ஆறு வகைகளில் இனங்காட்டிய சட்டம் 1983ம் ஆண்டின் திருச்சபைச் சட்டக்கோவையில் பின்வரும் மூன்று வகையினரை மட்டும் கூறிநிற்கின்றது.

**1983ம் ஆண்டின் சட்டக்கோவை சட்டம் 1184**

இறப்பதற்கு முன் மனமாற்றத்திற்கான சில அடையாளங்களைக் காட்டியிருந்தாலன்றி கீழ்க் கண்டவர்களுக்குத் திருச்சபை அடக்கச் சடங்குகளை மறுக்கவேண்டும்.

- பகிரங்கமமாக விசுவாசத்தை மறுதலிப்பவர்,திரிபுக் கொள்கையாளர், சமயப் பிளவை உருவாக்குபவர்
- கிறிஸ்தவ விசுவாசத்துக்கு எதிரான காரணங்களுக்காக உடல் எரித்தலைத் தெரிவு செய்துகொண்டவர்கள்.
- விசுவாசிகளுக்குப் பகிரங்க இடறலின்றி திருச்சபை அடக்கச் சடங்கு அளிக்க முடியாத மற்றப் பகிரங்கமான பாவிகள்.

இதே சட்டத்தின் இரண்டாம் பகுதி பின்வருமாறு கூறுகின்றது.

ஏதாவது ஐயப்பாடு எழுந்தால், தலத்திருச்சபை ஆளுனர் (Local Bishop) கலந்தாலோசிக்கப்பட்டு அவருடைய தீர்ப்பைப் பின்பற்ற வேண்டும்.

மேற்குறிப்பிட்டவைகளின் அடிப்படையில் தற்போது நடைமுறையில் உள்ள திருச்சபைச் சட்டக் கோவை (1983ம் ஆண்டு வெளியிடப்பட்டது) தற்கொலை செய்வோரைப் பற்றி நேரடியாக எதுவும் கூறிவில்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

இச்சட்டங்களை இயக்கியபோது திருச்சபை பின்வரும் விசுவாசக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டது.

01. திருச்சபையின் அடக்கச் சடங்குகளினதும் அடக்கத் திருப்பலிகளினதும் முதலாவது நோக்கம் இறந்தவருடைய ஆன்மாவுக்காகச் செபிப்பதாகும்.
02. எல்லா வழிபாடுகளும் (அடக்கச் சடங்கு உட்பட) முழுத் திருச்சபையின் ஐக்கியத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகளேயொழிய, யாருடைய தனிப்பட்ட சொத்துமல்ல. ஆகவே, திருச்சபையின் ஐக்கியத்துக்குக் களங்கம் விளைவிப்போரைத் தவிர வழிபாடுகள் எல்லாருக்கும் உரியவை.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது தற்போதைய திருச்சபைச் சட்டம் குறிப்பிட்டுக் கூறும் மூன்று வகையாரும்கூட மரணத்தின் முன்னதாக மனமாற்றத்திற்கான அடையாளங்களைக் காட்டினால் அவர்களுக்குக் கூட மரணச் சடங்கு மறுக்கப்பட முடியாது.

1917ம் ஆண்டுச் சட்டத்தில் ஒருவர் தன் உடலை அடக்கம் செய்யாமல் எரிக்க வேண்டும் என்று கூறியிருந்தால்



## யோசவ்வாஸ் அடிகளின் 3வது நூற்றாண்டு நிறைவை நோக்கி...

*இலங்கையின் அப்போஸ்தலர் என்று போற்றப்படும் முத்திப்பேறு பெற்ற யோசவ்வாஸ் அடிகளின் விண்ணகப் பிறப்பின் 3வது நூற்றாண்டின் நிறைவு 2001ம் ஆண்டில் நடைபெறவுள்ளது. இதற்கான ஆயத்தங்களில் ஈடுபடுவதற்காக தேசீய யோசவ்வாஸ் நிலையச் செயலகம் ஒழுங்கு செய்த ஒன்றுகூடலில் விரிவான செயல்திட்டங்கள் ஆராயப்பட்டுள்ளன. மறைமாவட்ட மற்றும் தேசீய அளவில் கட்டுரை, பாடல் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவருக்கு மரணச் சடங்கும் திருப்பலியும் மறுக்கப் படும் என்று கூறியிருக்க, தற்போதைய சட்டம் கிறிஸ்தவ விசுவாசத்துக்கு எதிரான காரணங்க ளுக்காக இப்படிச் சொல்வோருக்கு மட்டும்தான் இவை மறுக்கப்படவேண்டும் என்று கூறுகிறது. இதனடிப்படையில் முடிவில்லா வாழ்விலும் உடலின் உயிர்த்தெழுதலிலும் விசுவாசம் கொள்ளும் ஒருவர் தனது உடலை எரிக்கும்படி கூறுவாரானால் அவ ருக்கு மரணச் சடங்கும் திருப்பலியும் மறுக்கப்பட முடியாது. (இன்று கத்தோலிக்கர் பலருடைய உடலை எரிக்கும் வழக்கம் மேல் நாடுகளில் மட்டுமல்ல, எமது நாட்டிலும் உண்டு)

### தற்கொலை சாவான பாவமா?

தற்கொலையைப் பொறுத்த மட்டில், தற்கொலை செய்பவர் எப்படியான மனநிலையில் இருக்கிறார் என்பது இறைவனைத் தவிர யாருக்கும் தெரியாத விடயம். அனேகமான தற்கொலைகள் தனிமையில் யாருமில்லாதவேளையில்தான் நடைபெறுகின்றன.

இது தவிர தற்கொலை ஒரு சாவான பாவம் என்று கருதினால் கூட, ஒரு சாவான பாவத்துக்குரிய மூன்று நிபந்தனைகளும் ஒரு தற்கொலையில் உள்ளதா என்பதையும் ஆராயவேண்டும்.

**குருத்துவ அனைத்துலக மகாநாடு**

*கத்தோலிக்கக் குருத்துவம் பற்றிய அனைத்துலக மகாநாடு கடந்த நவம்பர் மாதம் தாய்லாந்து நாட்டின் அசம்சன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. கத்தோலிக்கக் குருத்துவம், நவீன உலகின் சவால் என்ற தலைப்பில் நடைபெற்ற இம்மாநாட்டில் உலகின் 10 நாடுகளிலிருந்து 80 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இலங்கையின் பிரதிநிதியாக யாழ் மாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்துகொண்டார்.*

### ஒரு பாவம் சாவான பாவம் என்பதற்கான மூன்று நிபந்தனைகள்

01. *கனமான காரியம்* (Serious Matter)
02. *பூரண சம்மதம்* (Full Consent)
03. *பூரண அறிவு* (Full Knowledge)

மேற்படி நிபந்தனைகளில் முதலிரு நிலை களும் ஒரு தற்கொலையில் இருந்தாலும், ஒருவர் பூரண அறிவு இருந்தால் தற்கொலை செய்வாரா என்ற கேள்வி பலராலும் கேட்கப்படும் ஒரு கேள்வியாகும்.

கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக் கல்வி என்னும் கையேடு தற்கொலை பற்றிப் பேசும் போது, ஆழ்ந்த உளவியல் பாதிப்பு, பெரும் கஷ்டங் களை எதிர்கொள்ளவேண்டும் என்ற ஆதங்கம், பெரும் துன்பங்களை, சித்திரவதைகளை எதிர்கொள்ள முடியாத நிலை ஆகியவற்றினால் ஒருவருடைய முழுச் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது என்று கூறுகிறது. (CCC1735)

மொத்தத்தில் தற்கொலை செய்யும் ஒருவரை விசுவாசத்தை மறுதலித்தார் என்றோ, பகிரங்கப் பாவியென்றோ, சாவான பாவத்தோடு இறந்தார் என்றோ தீர்ப்பிட முடியாத நிலையில் அவருடைய ஈடேற்றத்துக்காக மரணச் சடங்கு, திருப்பலி நிறைவேற்றி செபிப்பதில் தடையில்லை என்பதை திருச்சபையின் போதனையின் அடிப் படையில் கண்டுகொள்கிறோம்.

ஆயினும், ஒருவர், அவர் எப்படியாக இருந் தாலும் அவருக்கு மரணச் சடங்கு, திருப்பலி கொடுப்பதா கூடாதா என்ற சந்தேகம் ஏற்படுமிடத்து தலத் திருச்சபையின் ஆளுனராகிய ஆயரோடு கலந் தாலோசித்து முடிவெடுக்குமாறு திருச்சபைச் சட்டக் கோவை கூறுவதை நாம் மறந்துவிடக்கூடாது.

அத்துடன் திருச்சபையின் எந்தவொரு செயற்பாடும் மக்களுடைய விசுவாசத்துக்கு இடற லாய் இருக்குமென்றால் (அது திருச்சபைச் சட்டப்படி சரியான செயற்பாடாக இருந்தாலும் கூட) அது தவிர்க்கப்படவேண்டும் என்ற திருச்சபையின் பொது வான நிலைப்பாட்டையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இங்கு நாம் மீண்டும் வலியுறுத்துவது தற் கொலை செய்வது இறைவன் எம்மீது கொண்டுள்ள அன்புக்கு எதிரான ஒரு செயலாகும்.

**நன்றி - பாதுகாவலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## சூரிய நமஸ்காரம்



### ஆரம்ப நிலை

கைகளைக் கும்பிட்ட நிலையில் அமைதியாக நிற்கவும். சூரியனை மனதில் நினைத்து கிழக்குத் திசையை நோக்கி ஆசனங்களைத் துவங்கவும். கைகள் இரண்டையும் குவித்து மார்பின் மீது நேராக வைத்து நிற்கவும். பாதங்கள் இரண்டையும் சேர்த்து கால்களை வளைக்காது நேராக வைத்திருக்கவும். மூச்சுக் காற்றை வெளியே விட்டு சாதாரண நிலையில் நிற்கவும்.



### நிலை - 01

- கைகள் இரண்டையும் குவித்த நிலையிலே தலைக்கு மேலே தூக்கி உடலைப் பின்புறமாக வளைக்க வேண்டும்.
- கைகளைக் .காதோடு அணைத்தபடி உடம்பை வளைக்கவும்.
- இப்படிச் செய்யும்போது மூச்சை நன்றாக உள்ளே இழுக்கவேண்டும்.
- கால்களைச் சேர்த்து வைத்துக்கொள்ளவும். கை முட்டிகளை வளைக்கக் கூடாது.
- இது அர்த்த சக்கராசன நிலையாகும்.

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழிசையின் தொன்மை

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சேது சமஸ்தான மகா வித்துவான் ரா. இராகவஐயங்கார் காந்தர்வர் தமிழரைச் சேர்ந்தவர். தமிழ் இனத்தவர், என்று தமிழர் வரலாறு என்னும் அவரது நூலில் கூறுகின்றார். தமிழ் நாட்டிலிருந்து பிரிந்த தமிழின் ஒரு பகுதியினர் வடக்கேயும் மற்றொரு பகுதியினர் தெற்கேயும் சென்றனர். தெற்கே சென்றவர்கள் இலங்கைத் தீவில் குடியேறினர். காந்தர்வர் என்போர் தமிழில் யாழோர் எனப்படுவர். அவர்கள் யாழை உடையவர்களாதலால் யாழோர் எனப்பட்டனர்.

இலங்கைத் தீவில் அந்த யாழோர் வாழ்ந்த பகுதி யாழ்ப்பாணம் எனப் பெயர் பெறுகின்றது. ஆங்கிலத்தில் அப்பெயர் Jaffna எனப்படும். யாழோர் தமிழ் நாட்டில் வாழ்ந்த பழங்குடி மக்களாகிய பாணர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

தொல்காப்பியர் இவர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

*"முதலோடு புலர்ந்த யாழோர் மேன*
*தவலறம் சிறப்பின் ஐநில் பெறுமே"*

(தொல்காப் பொருள் 1052)

இவ்வாறு தமிழிசையின் தொன்மை, வரலாற்றுக்கு எட்டாத காலத்துக்கு உட்பட்டது என்பது பல அறிஞர்களது கருத்தாகும். பண்டைய தமிழ்ப் பெண்ணொருத்தி திருமணமான சில ஆண்டுகளின் பின் இவ்வாறு கூறுகின்றாள்:

*"நீ கணவனுடன் வாழும் வாழ்க்கை எவ்வாறு இருக்கிறது"* எனத் தோழி கேட்டாள்.

(அகநானூறு 152வது பாடல்)

அதற்கு அவளது பதில்: *"தொல் இசை நீறி இய உரைசால் பாண்மகள் என்னும் முறை நிறுத்த பண்ணினுள்ளும் புதுவது புனைந்த திறத்தினும் வதுவை நாளினும் இனியனாமால் எமக்கே"* எனப் பதில் ஈர்க்கிறாள். இப்பாடலைக் கூறியவரும் ஒரு பெண்மணியே. தொல்காப்பியர் முல்லைப் பண் பற்றியும் பொதுமக்களும் இசை ஞானம் பெற்றிருந்தார்கள் எனவும் முல்லை இசையே முன்தோன்றிய இசை எனவும் கிரேக்க நாட்டிலும் தமிழ் நாட்டைப் போன்றே நிலத்தின் பெயரால் இசைக்குப் பெயரிட்டனர் என்றார். இங்கு நாம் கூறும் கருத்து முக்கியமானது.

கலை வாழ்வின் முக்கிய அம்சம் இசையாகும். இவற்றைப் பற்றி நிறையவே எழுதலாம். மனிதன் உணர்ச்சியோடு கூடியவன். அறிவும் உணர்ச்சியும் ஒரு தராசின் இரு பக்கங்கள். கம்பன் பின்வருமாறு கூறுகின்றான். அவரது கவிதையின் வரிகளுக்கு இடையில் வாசிக்கப்படும் உய்த்து உணரப்படும் உணர்வுகள் உள்ளன.

*"இப்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்*
*கற்பெனும் பெயரதொன்றும் களி நடம்புரியக் கண்டேன்"*

இவ்வாறு அனுமன் ராமனிடம் கூறுவதாக கம்பர் வருணிக்கும் உணர்வு அலைகள் நம் மனங்களைப் பிணிக்கின்றன. திருவள்ளுவர் கவிதை உள்ளம் படைத்தவர். காமத்துப் பாலில் அவர் கூறுகின்றார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*"ஊரார் கௌவை எருவாக அன்னைசொல்*
*நீராக நீளும் இந் நோய்"*

வள்ளுவரின் சொல் இனிமை நயம் ஆகியவற்றின் வழியாக காதல் நோய்ப்பட்ட பெண் ஒருவளுக்கு பேச்சுக்கு அஞ்சாதே எனத் திடமளிக்கின்றார். ஸ்ரீ ஜவகர்லால் நேரு ஆட்சி அலுவலில் அமர்ந்திருந்தபோது அவருக்குக் கவிஞர் Robert Frost எழுதிய வரிகள் அதிக வலிமையைக் கொடுத்தன. பின்வரும் வரிகளை மேற்கோள் காட்டுகின்றோம்.

The Woods are lovely, dark and deep
But I've promise to keep;
And miles to go before I sleep;
And miles to go beofore I sleep;

எனவே, கவிதைகள் மனித மனங்களுக்கு உணர்வுகளை ஊட்டுகின்றன. குழந்தைகளுக்கு கவிதை உணர்வு நிறையவே உள்ளது. ஆய்வு ஊக்கமும் அதிகமே. அவற்றை நாம் புறக்கணித்து அவர்களது வாழ்வியலைப் பழுதடையச் செய்கின்றோம்.

இதனாலேயே உலகப் பிரசித்தம் பெற்ற நூல் ஒன்று வெளிவந்தது. அது கல்விசார் நூலாகும். The school is dead. இந்திரா காந்தி போன்ற பெரியவர்கள் இந்நூலை அலசிப் படித்துள்ளனர்.

*"என் ஆயர் ஆண்டவர் எனக்கென்ன குறைவு"*
(சங் 37)

என்பது கவிதை நயம் கனிந்த சங்கீதம். இயேசு பெருமான் பல சங்கீதக் கவிதையைப் பயன்படுத்தினார். இறக்கும் முன் 'இறைவனே இறைவனே ஏன் என்னைக் கைவிட்டீர்' என கல்லும் உருகக் கூறினார். இது விவிலியம் 68ம் சங்கீதம் 22ம் வசனமாகும்.

- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -

# திருத்தந்தையின் தூதர் விடைபெறுகிறார்



திருத்தந்தையின் இலங்கைப் பிரதிநிதியாகப் பணியாற்றிய அதிவணக்கத்துக்குரிய மாறியோ செனாரி ஆண்டகை இலங்கையில் தனது பணியை முடித்துக்கொண்டு சிரியா நாட்டிற்குத் திருத்தந்தையின் தூதுவராக பணிப் பொறுப்பேற்றுச் செல்கின்றார். 2004ம் ஆண்டிலிருந்து இலங்கையில் பணியாற்றிய இவருக்கு பெப்ரவரி மாதம் 1ம் திகதி தேவத்தையில் பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது. ஆண்டகை அவர்களுக்கு நமது நன்றிகளையும் மறைமாவட்ட மக்கள் சார்பில் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நித்திய இளைப்பாற்றியில்

## திகதிகள் 31



மாதமொன்று மாய்ந்து போனாலும் எம்
மனவடுக்கள் தீர்ந்தபாடில்லை
மாதா உன் புன்னகை வதனம் என்னாளும்
மடியாமல் கண்ணசைக்கிறது அனுதினம்

உளியுந்தன் கைகளாலே உறவுகள் எனும்
சிலைகளை வடித்துத் தந்தாய்
பழியொன்றும் இல்லை உன் வாழ்வில்
இறை பணிதனை முடித்துச் சென்றாய்.

நல்ல சமாரித்தன் வாழ்வுதனை நீ
உள்ள சம்மதத்துடன் வாழ்ந்துநின்றாய்
எங்கள் உள்ளக் கிடக்கை எங்கும் - உன்
உன்னத வாழ்வு எதிரொலிக்கும்

கட்டிய கணவனுக்குக் காலமெல்லாம்
கைகொடுத்த அன்பான மனைவி நீ
கட்டியணைத்துக் கவனித்து
பாசமழை பொழிந்த அயராத அன்னை நீ

பிரிவின் துயரால் பிதுங்கி நிற்கும் காயம் - தேய்
பிறையின் உருவாய் சுருங்கிப் போகும் மாயம் - இறை
அறிவின் பெயரில் உயர்த்தி விட்ட தாயாய் - உந்தன்
நினைவின் தரையில் எங்கள் இதயம் என்றும் மேயும்

பிரிவென்ற வார்த்தை இங்கு பிரயோகிக்கக் கூடாது - இயேசுவுக்குள்
மறுபிறப்பு என்று கொள்ள நாம் மறந்துவிடக்கூடாது
துறவென்ற வாழ்விற்கு மகனை தூபமிட்டவள் நீ - இன்று
அறமென்ற வாசல் வழி பிரவேசித்துவிட்டாய்

சத்திய வழியில் சரித்திரம் படைத்தவள்
நித்திய வாழ்வின் சத்திரம் பெற்றுவிட்டாள்
பக்தி நிலையில் நீ பரமன் வழிநடந்தாய்
முக்தி நிலை எனும் பரமனிடம் பெயரெடுப்பாய்

குடும்பத்தினர்

இல: 243, திருமலை வீதி
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கருணைக் Euthanasia கொலை

## (வேதனைகளுக்குப் பிழையான தீர்வு)

திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பர் புனித பேதுரு சதுக்கத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் கடந்த 01.02.2009 அன்று மூவேளைச் செப வேளையில் உரையாற்றுகையில் " 'கருணைக் கொலை' வேதனைகளில் இருந்து விடுபடுவதற்கான ஒரு பிழையான தீர்வு" என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அன்றைய ஞாயிறு நற்செய்தியின்படி இயேசுநாதர் தன்னை "மெசியா" என்று மற்றவர்களுக்குப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டாமென்று தன்னுடைய சீடர்களுக்குக் கண்டிப்பாகப் பணித்திருந்தார். மாற்கு நற்செய்தியின் அடிப்படையில் "மெசியா" பற்றிய இரகசியம் மிகவும் பொருள் வாய்ந்ததாகும். ஏனெனில், இயேசு நாதருடைய பணிவாழ்வின் வெற்றி இதிலேதான் தங்கியிருந்தது என்று கூறலாம். மனிதனைப் பாவத்திலிருந்தும் அதன் பிடியிலிருந்தும் தப்புவிப்பதற்காக தன்னைப் பலியாகக் கொடுக்க வேண்டுமென்று அவர் அறிந்திருந்தார். இயேசுநாதர் தன்னுடைய பாடுகள், மரணம் மூலமாக, மனுக் குலத்தின் மீது கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தினார். இதன் மூலம் மனிதர்கள் தங்கள் வாழ்க்கையிலே எதிர்கொள்கின்ற துன்பங்கள், வேதனைகள் போன்றவற்றுக்கு ஒரு சிறப்பான விளக்கத்தை வெளிப்படுத்தினார்.




அவர் வெளிப்படுத்திய உண்மையானது, இந்த உலகிலே வாழ்கின்ற ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தங்கள் வாழ்க்கையில் ஏற்படுகின்ற இன்ப, துன்ப அனுபவங்கள் மூலமாகப் பெறக்கூடியதொன்றாகும். இத்தாலிய ஆயர்கள் தங்கள் வருடாந்த உயிர் வாழ்க்கை தினத்தின் கருப்பொருளாகத் துன்ப துயரங்களை எதிர்கொள்ளப் பெறப்படுகின்ற "ஆன்மீக சக்தி"யை தெரிவு செய்துகொண்டுள்ளனர். எனவே, "கருணைக் கொலை" என்பது வேதனைகளிலிருந்து விடுபடுவதற்கான ஒரு பிழையான தீர்வு; இது மனித மகத்துவத்திற்கு எதிரானது.

மனிதர்களாகப் படைக்கப்பட்ட நாம் இன்ப, துன்பங்களை, சோதனை வேதனைகளைத் தாங்கித்தான் ஆகவேண்டும். இறைவனின் அன்பு வேதனை நாட்களில் மனிதர்களுக்குத் திடப்படுத்தும் சக்தியைக் கொடுக்கும். ஆகவே, கருணைக் கொலை நிம்மதியான சாவைக் கொடுக்கும் என்று கூறமுடியாது. துன்பத்தில் உழலுகிறவனுடைய கண்ணீரும், அவனோடு கூடவே அல்லல் படுகிறவனுடைய வேதனையும் இறைவன் முன்னிலையில் வீணாகப் போகாது என்று நாங்கள் மிகவும் உறுதியாகக் கூறலாம் என்றார்.

– தமிழில் திருமலை ஜெனா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

சுனாமிக்குப் பின் பலரதும் வாய்கள் உச்சரிக்கும் ஒருசொல் நிறுவனம். ஆங்கிலத்தில் உள்ள ESTABLISHMENT என்னும் சொல்லுக்கீடான இச்சொல் நிறுவகம் என்றே இருத்தல் வேண்டும். ஆனால், படித்தோர்கூட நிறுவனம் என்று எழுதுவதும், பேசுவதும் வியப்பைத் தருகின்றது. அரசினரால் வெளியிடப்படும் பாடநூல்களில் தேசிய கல்வி நிறுவகம் என்று இருத்தல் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்காலத் தமிழ் இலக்கியகாரர்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் சொற்களில், செல்நெறி, வகிபாகம் என்பன குறிப்பிடத்தக்கன. இவை




இரண்டும் TREND, POSITION என்னும் ஆங்கிலச் சொற்களின் கருத்துகளைத் தரும் வண்ணமே உருவாக்கப்பட்டவையாகும். POSITION என்னும் ஆங்கிலச் சொல் POSITUS என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும்.

அகரத்தை ஆதியாகக் கொண்டு ஒழுங்குபட அமைக்கப்பட்ட சொற்களின் தொகுப்பு என்னும் பொருள் தரும் அகராதி என்னும் சொல் 17ம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த இத்தாலி நாட்டுக் கத்தோலிக்கத் துறவி வீரமாமுனிவரால் DICTIONARY என்னும் ஆங்கிலச் சொல்லை மாதிரியாகக் கொண்டு தமிழுலகிற்குத் தரப்பட்ட ஓர் அரிய கொடையாகும்.

DICTIO என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்த DICTION என்னும் ஆங்கிலச் சொல்லுடன் ARRAY என்னும் மற்றொரு ஆங்கிலச் சொல்லின் குறுக்கமான ARY என்பது புணர்த்தப்பட்டமையாலேயே DICTIONARY என்னும் புதிய சொல் தோற்றம் பெற்றது. இச்சொல்லில் இடம்பெற்றுள்ள DICTION என்பதற்குச் சொல் என்றும் ARRAY என்பதற்கு, ஒழுங்கு, வரிசை என்றும் பொருள். இதன்படி DICTIONARY என்னும் ஆங்கிலச் சொல், தமிழ்ச் சொல் அகராதி போன்று ஒழுங்குபட அமைக்கப்பட்ட சொற்களின் தொகுப்பு என்னும் பொருளையே தரும்.

இன்று சிலரால் பயன்படுத்தப்படும் அகரமுதலி எனும் சொல்லும் அகராதி என்னும் சொல்லின் பொருளை அடியொற்றி எழுந்ததாகும். இதற்கும் அகரத்தை முதலாகக் கொண்டு அமைக்கப்பட்ட சொற்களின் தொகுப்பு என்றே பொருள். எனவே இரண்டும் ஒத்த சொல் அன்றி வேறல்ல.

தமிழில் புதிய சொல் தருதல் சாதாரண காரியம் அன்று என்பதற்கு, முப்பதுகளில் அறிஞர் டி.கே.சி அவர்களால் தமிழுக்குத் தரப்பட்ட பண்பாடு எனும் சொல் தக்க சான்று. இச்சொல் (பண்பாடு) CULTURA என்னும் இலத்தீன் சொல்லின் கருத்தை ஒட்டி ஆக்கப்பட்டதாகும். இதற்கு (CULTURA) பண்பாடு என்றும் நிலத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பண்படுத்தல் என்றும் பொருள். பண்பட்ட நிலத்தைப் போலவே, பண்பட்ட மனமும் இருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட மனத்திலேயே பண்பாடு மலரும் என்பதையே இச்சொல் உணர்த்தும்.

பண்பாடு என்பதனைக் குறிக்கும் CULTURE எனும் ஆங்கிலச் சொல் CULTURA என்னும் இலத்தீன் சொல்லிலிருந்தே பிறந்தது. பண்பாடு என்னும் சொல்லின் பொருளைத் தரும் கலாசாரம் எனும் சமஸ்கிருதச் சொல் CULTURA என்னும் இலத்தீன் சொல்லோடு தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். ஏனெனில் இரண்டும் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. எனினும் கலாசாரம் எனும் சொல்லின் கலா எனும் சொல் - கலை என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு என்பர் தமிழ் அறிஞர் சிலர். சாஸ்திரி எனும் வடமொழிச் சொல், தமிழில் கலைஞன் ஆனமை இதற்கு ஓர் உதாரணம்.

பண்பாடு என்னும் சொல்லைப் போன்றே மகாகவி பாரதியாரால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் பொது உடைமை, புரட்சி ஆகிய சொற்கள் COMMUNISM, REVOLUTION எனும் ஆங்கிலச் சொற்களை ஒட்டி எழுந்தவை. எனினும் அவற்றின் அடிச் சொற்களாக இருப்பவை COMMUNIS, REVOLVO எனும் இலத்தீன் சொற்களாகும்.

இவ்விதம், தமிழில் இணைந்துள்ள திசைச் சொற்கள் அல்லது புதிதாகத் தோன்றியுள்ள கலைச் சொற்கள் எல்லாம் தமக்கெனத் தனித்துவமான பொருளை உடையவை. அதனால், அவை குறிக்கும் பொருளைச் சரிவர உணர்ந்து, அவற்றைப் பயன்படுத்துதல் அறிஞர், எழுத்தாளர் என்போரின் கடமை என்பதை இங்கு குறிப்பிட வேண்டுமா என்ன?

**- கவிஞர் வாகரைவாணன் -**

# எங்கே கண்டுபிடியுங்கள்

## விடை

| | | | |
|---|---|---|---|
| 16 | 02 | 03 | 13 |
| 05 | 11 | 10 | 08 |
| 09 | 07 | 06 | 12 |
| 04 | 14 | 15 | 01 |

*நான்கு மூலை எண்களும் மாறவேண்டும்.*

*01 இருக்குமிடத்தில் 16*
*04 இருக்குமிடத்தில் 13*
*16 இருக்குமிடத்தில் 01*
*13 இருக்குமிடத்தில் 04*

*நடு சதுர எண்களும் மாறவேண்டும்.*

*06 இருக்குமிடத்தில் 11*
*07 இருக்குமிடத்தில் 10*
*10 இருக்குமிடத்தில் 07*
*11 இருக்குமிடத்தில் 06*

● வயலற்

**இப்போது எப்பக்கம் கூட்டினாலும் 34 வரும்.**
**இதைத் தயாரிப்பதற்கு 5 நிமிடங்கள் போதுமானது.**
**நீங்கள் தயாரித்திருந்தால் நீங்கள் சிறந்த நுண்மதியாளர்தான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30- 04 - 2008




# விவிலியம் கற்போம் - 74

(எண்ணிக்கை 13:1–33)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம், "இஸ்ரயேல் மக்களுக்கு நான் கொடுக்கும் கானான் நாட்டை உளவு பார்க்க ஆள்களை அனுப்பு; மூதாதையர் குலம் ஒவ்வொன்றிலிருந்தும் அவர்களுள் தலைவனாயிருக்கும் ஒருவனை நீ அனுப்ப வேண்டும்" என்றார். ஆண்டவர் கட்டளைப்படியே ........................................... அவர்களைப் பாரான் பாலைநிலத்திலிருந்து அனுப்பினார்; அந்த ஆள்கள் அனைவரும் இஸ்ரயேல் மக்களின் தலைவர்களாக இருந்தவர்கள். அவர்களின் பெயர்கள்: ரூபன் குலத்திலிருந்து சக்கூரின் மகன் ..........................................; சிமியோன் குலத்திலிருந்து ஓரியின் மகன் சாபாற்று; யூதாக் குலத்திலிருந்து எப்புன்னேயின் மகன் காலேபு; இசக்கார் குலத்திலிருந்து யோசேப்பின் மகன் இகால்; எப்ராயிம் குலத்திலிருந்து நூனின் மகன் ஓசெயா; ...................................... குலத்திலிருந்து இராபின் மகன் பல்தி; செபுலோன் குலத்திலிருந்து சோதியின் மகன் காதியேல்; யோசேப்பு குலத்திலுள்ள மனாசே குலத்திலிருந்து சூசியின் மகன் காத்தி; தாண் குலத்திலிருந்து கெமல்லியின் மகன் ......................................; ஆசேர் குலத்திலிருந்து மிக்கேலின் மகன் செதூர்; நப்தலி குலத்திலிருந்து ஓப்சியின் மகன் நக்பி; காத்து குலத்திலிருந்து மாக்கியின் மகன் கெயுவேல்; நாட்டை உளவு பார்க்க மோசே அனுப்பிய ஆள்களின் பெயர்கள் இவைகளே. மோசே ................................... மகன் ஓசேயாவை "யோசுவா" என்று அழைத்தார். கானான் நாட்டை உளவு பார்க்கும்படி மோசே அவர்களை அனுப்பினார்; அவர்கள் போய் சின் பாலைநிலத்திலிருந்து ஆமாத்து நுழைவாயிலருகில் இருந்த இரகோபு வரையிலும் நாட்டை உளவு பார்த்தனர். அவர்கள் ................................ சென்று, பின் எபிரோனுக்கு வந்தனர். அங்கு ஆனாக்கின் வழிமரபினரான அகிமான், சேசாய், தல்மாய் ஆகியோர் இருந்தனர்; எகிப்திலுள்ள சோவானிலும் ஏழு ஆண்டுகளுக்கு முன்னரே .................................. கட்டப்பட்டிருந்தது. நாற்பது நாள்கள் நாட்டை உளவு பார்த்த பின் அவர்கள் திரும்பி வந்தனர். அவர்கள் செய்தி கொண்டு வந்தனர்; மோசேயிடம் கூறியது; நீர் எங்களை அனுப்பிய நாட்டுக்கு நாங்கள் சென்று வந்தோம்; அதில் ............................ தேனும் வழிந்தோடுகிறது என்றனர். காலேபு "நாம் உடனடியாகப் போய் நாட்டைப் பிடித்துக் கொள்வோம்; ஏனெனில் நாம் அதை எளிதில் வென்றுவிடமுடியும்" என்றார். ஆனால் அவருடன் சென்றிருந்தோர் "நாம் அம்மக்களுக்கு எதிராகப் போக முடியாது; ஏனெனில் அவர்கள் ..................................... மிக்கவர்கள்" என்றனர். இவ்வாறு அவர்கள் தவறான தகவலை இஸ்ரயேல் மக்களுக்குக் கொண்டு வந்தனர்; அவர்கள்; அந்நாடு தன் குடிமக்களையே விழுங்குவதாய் இருக்கிறது; மனிதர் நெடிய உருவத்தினர்; ................................... ஐயும் கண்டோம்; எங்கள் பார்வையில் நாங்கள் வெட்டுக்கிளிகள் போன்றிருந்தோம்; அவர்களுக்கும் நாங்கள் அவ்வாறே காணப்பட்டோம்" என்று கூறினார்.

விடைகள் : **நூனின், எபிரேபன், அரக்கர், வலிமை, பென்யமின், பாலும், சம்முவா, நெகேபினுள், அம்மியேல், மோசே**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 74

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. உடல் வளர்ச்சிக்குத் தேவையான முக்கிய சத்து
(கொழுப்பு, கார்போஹைட்ரேட், புரதம்)

2. 'பிக்பென்' கடிகாரம் உள்ள நகரம்
(நியூயோர்க், இலண்டன், பாரிஸ்)

3. உலகில் முதன் முதல் தோன்றிய மருத்துவம்
(யுனானி, ஆயுர்வேதம், ஹோமியோபதி)

4. முதன் முதல் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கிய நாடு
(பிரித்தானியா, பிரான்ஸ், நியூசிலாந்து)

5. 'படித்தவர் பரிசு பெறுவர்' என்பதில் படித்தவர் என்பது
(தொழிற் பெயர், ஆகு பெயர், வினையால் அணையும் பெயர்)

6. கரைப்பார் கரைத்தால் ..........................................
(களியும் கரையும், கல்லும் கரையும், கரியும் கரையும்)

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 74
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media








## பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி**
**ரூபா 200/= பரிசு பெறுபவர்**

- ப. மேழின் றொக்ஷினா
  கல்லாறு
- செ. தினுஸன்
  அக்கரைப்பற்று - 09

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி**
**ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- கவிகரன்
  ஆரயம்பதி
- லோகநாதன் அன்று சியாம்
  திருக்கோவில் 02

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 24 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  K. செரின்
  திருகோணமலை
- **இரண்டாம் பரிசு** - 200/=
  க. கவிகரன்
  ஆரையம்பதி
- **3ம் பரிசு** - 100/=
  சு. டிலுக்ஷன்
  தேவதாசன்
  கெங்கல்ல

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)




**காட்சியும் கவிதையும் 02**



ஆக்கம்: க. கிறிஸ்ரி லோகநாதன்
"சோபனம்"
கத்தோலிக்க ஆலய வீதி
திருக்கோவில் 02

ஊர் விட்டு ஊர் போகும் சாபம் - இங்கு
ஓயாமல் அரங்கேறும் கோலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org